# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM

S.C.No.259/2023

Deposition of witness for Prosecution – PW-2

| | | | |
|---|---|---|---|
| Name | : வனிதா | Caste | : |
| W/o. | : நாகராஜ் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act No.44 of 1969, on this 16.09.2025.

Accused present.

<u>முதல் விசாரணை :</u>

நான் அயோத்தியாபட்டிணம் ராமர் கோவில் அருகே குடியிருக்கிறேன். எனது கணவர் நாகராஜ் ஆட்டோ டிரைவராக வேலை செய்து வருகிறார். அ.சா.1 எனது அம்மா ஆவார். வழக்கில் இறந்துபோன மணி எனது தந்தை ஆவார். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். அவரை என் அப்பாவுடன் நான் பார்த்திருக்கிறேன். என் அப்பாவிற்கு குடிபழக்கம் உள்ளது. எதிரியும் என் அப்பாவும் அவ்வப்போது எங்கள் வீட்டிற்கு வந்து

குடிப்பார்கள். அது குறித்து எனக்குத் தெரியும்.

07.01.2023ம் தேதி அ.சா.1 – என் அம்மா எனக்கு மாலை 5.00 மணிக்கு போன் செய்து அப்பா வேலைக்கு சென்றுவிட்டதாக என்னிடம் சொன்னார். என் அப்பா லாரி டிரைவராக வேலை செய்து வந்தார். அவர் கருக்குப்பட்டி குமார் என்பவரிடம் வேலை செய்து வந்தார். மறுநாள் 08.01.2023ம் தேதி மாலை 5.30 மணி அளவில என் அம்மா எனக்கு போன் செய்து என் அப்பா, கருக்கப்பட்டியில் உள்ள குமார் என்பவரின் தோட்டத்து கிணற்றில் கொலையுண்டு கிடப்பதாக எனக்கு தகவல் சொன்னார். தகவல் கேட்டு நான், என் கணவர், உறவினர்களுடன் சம்பவ இடத்திற்கு நான் 7.00 மணி அளவில் சென்று பார்த்தேன். என் அப்பாவின் உடல் பாகங்கள் தனித்தனியே வெட்டப்பட்ட நிலையில் இறந்த நிலையில் கருக்கப்பட்டி குமார் கிணற்றின் அருகே பிணமாக கிடந்தார். அது குறித்து புகார் அளிப்பதற்காக நான், என் அம்மா, என் கணவர் எல்லோரும் தாரமங்கலம் காவல் நிலையம் சென்று அங்கு என் அம்மா புகார் கொடுத்தார்.

எனது அப்பாவிற்கும் எதிரிக்கும் ஏற்கனவே செல்போன் சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. என் அப்பாவிடம் எதிரியிடம் ரூ.200/– பெற்றுக்கொண்டு செல்போனுக்கு பதிலாக செல்போன் காலிபெட்டியை கொடுத்ததால் எதிரிக்கு என் அப்பாவின்மேல் முன் விரோதம் இருந்து வந்தது. அதை மனதில் வைத்துக்கொண்டு எதிரி என் அப்பாவின் கழுத்தை அறுத்து உடலை 6 துண்டுகளாக வெட்டி கொலை செய்து உடல் பாகங்களை கருக்கப்பட்டி குமாரின் கிணற்றில் போட்டுவிட்டார் என்று தெரிந்து கொண்டேன்.

மறுநாள் 09.01.2023ம் தேதி காவல் ஆய்வாளர் வந்து தீயணைப்பு துறையினரின் உதவியுடன் உடல் பாகங்களை கிணற்றிலிருந்து எடுத்து கிணற்று அருகே தரையில் வைத்து உடல் பாகங்களை ஒட்ட வைத்து பிரேத விசாரணை செய்தார்கள். அப்போது நானும் உடனிருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.

Sd/– S.Sumathy,
Principal Sessions Judge, Salem.